*கவனிக்க.-2025.05.16 ஆந் திகதிய 2437 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2439 - 2025 මැයි මස 30වැනි සිකුරාදා - 2025.05.30

2439ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு மே மாதம் 30ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (II ஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 380 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 383 |
| உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள் | 387 |
| அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும். இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025,யூன் மாதம் 06ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, மே மாதம்23ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கே.ஜீ. பிரதீப் புஷ்ப குமார,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1 - B 82668 - 403 (2025/05)

# ஆயவிற்பனையும் குத்தகையும்

## திருகோணமலை மாவட்ட கள்ளுத்தவறணை குத்தகைக்கான விற்பனை- 2025-2026
## 2025, யூலை 01 ஆந் திகதி தொடக்கம் 2026,யூன் 30 ஆந் திகதி வரை

1. 2025, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2026, யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு சில்லறையாக விற்பதற்கான 1982.08.20 ஆந் திகதி கொண்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைக் குத்தகையினை விற்பனை செய்வதற்கான நடைமுறைக்களுக்கேற்ப, கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான விலைகோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து விலைகோரல் படிவங்களும். திருகோணமலை பிரதேச செயலாளர் பணிமனையிலிருந்து பெற்று அவற்றைப் பூர்த்தி செய்வதுடன், கீழ்க்காணப்படும் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விக் கோரல் வைப்புப் பணத்தினை வைப்புச் செய்தமையை உறுதிப்படுத்தும் முகமாக பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினையும், குறிப்பிட்ட விலைகோரலில் குறிப்பிடப்பட்டுள்ள விலை நிர்ணயத்திற்கு ஆகக் குறைந்தளவான 15% ஆன பெறுமதிச் சான்றிதழும், அதனோடு இணைத்தல் வேண்டும்.

3.உரியவாறு தயாரிக்கப்பட்ட அனைத்து விலைகோரல் பத்திரங்களும் அரக்கு முத்தரையிடப்பட்ட கடிதவுரையில் இடப்படல் வேண்டும். அக் கடிதவுறையின் இடது பக்கம் மேல் மூலையில் "............................இலக்கமுடைய ...................... கள்ளுத்தவறைணைக்கான விலைகோரல் " எனக் குறிப்பிடப்படுவதுடன் , உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தவறணையின் பெயர், இலக்கம் ஆகியவற்றையும் குறிப்பிட்டு 2025.06.07 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளருக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது அந் நேரத்திற்கு முன் பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளரின் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தரது அலுவலக அறையில் வைக்கப்பட்டிருக்கும் விலைகோரல் பெட்டியில் இடுதல் வேண்டும்.

4. விலைகோரலானது 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைக் குத்தகைக்கான விற்பனை நியமங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

5. 2025.06.17 ஆந் திகதி மு.ப.10.00 மணிக்கு விலைக் கோரல்கள் ஏற்றுக் கொள்ளப்படும். நேரம் முடிவடைந்தவுடனேயே விலை கோரல் பத்திரங்கள் திறக்கப்படும். அச் சந்தர்ப்பத்தில் அனைத்து கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தரகர்கள் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பணிமனைக்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

6. முன்வைக்கப்பட்ட விலை கோரல் படிவங்களுள் தெரிவு செய்யப்பட்ட திருப்திகரமான ஒப்பந்தகாரரால் 02 மாதங்களுக்கு மேற்பட்ட வைப்புப்பணமும் ஒரு மாதத்திற்கான அனுமதிப்பத்திர கட்டணமும் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் குறித்த தினத்திலேயே செலுத்தப்படல் வேண்டும்.

7.உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளுள் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டவற்றை 2025.06.23 ஆந் திகதி மு,ப, 10.00 மணி வரை கேள்விப்பத்திரங்கள் பாரமேற்று முடிந்தவுடனேயே கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். இதற்கான மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தகைகளும் உரித்தாகும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

8. இது தொடர்பான மேலதிக விபரங்களை திருகோணமலை பட்டினமும் சூழலு் பிரதேச செயலாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ள முடியும்.

நா. மதிவண்ணன்,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
பட்டினமும் சூழலும் ,
திருகோணமலை.
2025.05.20.

**உப அட்டவணை**

| *தொடர் இல.* | *பிரிவு* | *வலயப் பிரிவு* | *கள்ளுத் தவறணை திறக்கும் நேரம்* | *கள்ளுத் தவறணை மூடும் நேரம்* | *மீளளிக்கப் படும் விலை கோரல் வைப்புப் பணம்* | *மீ ள ளி ப் பு ச் செய்யப்படாத விலைகோரல் வைப்புப் பணம்* |
|---|---|---|---|---|---|---|
| 01 | வட்டார இல.-01 | வில்லூன்றி இல.-01 | மு.ப.11.00<br>பி.ப.5.00 | மு.ப.2.00<br>பி.ப.8.00 | ரூபா 3000.00 | ரூபா 1000.00 |
| 02 | தெக்கலூத்து | தெக்கலூத்து இல.-03 | மு.ப.11.00<br>பி.ப.5.00 | மு.ப.2.00<br>பி.ப.8.00 | ரூபா 1500.00 | ரூபா 1000.00 |

05- 244

**மட்டக்களப்பு மாவட்டம்**
**கோறளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகப் பிரிவு**
**வாகரை கள்ளுத்தவறணைக்கான குத்தகை விற்பனை 2025, யூலை- 2026, யூன்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க 1982.08.20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியில் வெளிவந்த 1982 ஆம் ஆண்டின் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை விதிகளின் படி மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று வடக்கு வாகரை பிரதேசத்திற்குட்பட்ட வாகரை கள்ளுத்தவறணைகளுக்கான 2025, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2026, யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ் குறிப்பிட்ட திகதி நேரம் வரை கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் கோரளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச்சபை கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

01. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐந்நூறு ரூபா (1500.00) பணத்தை கோரளைப்பற்று வடக்கு, பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற முடியும். கேள்விப்பத்திரத்துடன் பணம் செலுத்திய பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2025.05.30 ஆந் திகதி தொடக்கம் 2025.06.11 ஆந் திகதி மு.ப. 11.00 மணியுடன் முடிவடையும்.

02.அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதி சான்றிதலானது , கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில்' 15% இற்கு குறைவாக இருத்தலாகாது. இப் பெறுமதிச் சான்றிதழ் கேள்விப் பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

03.கேள்விப்பத்திரம் பிழையாக நிரப்பட்டிருந்தால் நிராகரிக்கப்படும்.

04. கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு கட்டிய பணத்தை திருப்பி எடுக்க விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கும் நாளிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பி சமர்ப்பித்தால் அக் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

05. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

06. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம் பொருள் கூட்டுறவு சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத் தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும், சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்பிக்கும் பட்சத்தில் குத்தகை விற்பனைக்கான விண்ணபப்படிவம் வழங்கப்படும்.(நிதி அமைச்சின் 01/ 2012 ஆம் இலக்கம் கொண்ட 2012.01.05 ஆந் திகதிய சுற்று நிரூபத்திற்கு அமைவாக காணப்படுதல் வேண்டும்.

07.ஏனைய விபரங்கள் கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.

அமலினி .K.,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
கோரளைப்பற்று வடக்கு ,
வாகரை.
2025.05.09.

**கள்ளுத்தவறணை அமைய வேண்டிய இடம்**

| *தவறணை அமைய வேண்டிய இடம்* | *தவறணை இலக்கம்* | *கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும்* | |
|---|---|---|---|
| | | *திகதி* | *நேரம்* |
| பால்சேனை கிராம அலுவலர் பிரிவு | TT No. 5 | 2025.06.12 | பி.ப. 2.00 மணி |

குறிப்பு: (1) கேள்விச்சபை 2025.06.12 ஆந் திகதி முதல் பிற்பகல் 2.00 மணிக்கு கூடும்.
(2) விற்பனை தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு கேள்விசபை 2025.06.19ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு நடைபெறும்.

(3) தெரிவு செய்யப்படும் குத்தகைக்காரர் மீள்குத்தகை விற்பனை இடம் பெற்ற அதே தினத்தில் அலுவலக நேரத்தினுள் பாதுகாப்பு வைப்புத்தொகையை பிரதேச செயலகத்தில் செலுத்த வேண்டும்.

05- 171

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242( 3) (b) ஆம் பிரிவின் விதிகளுக்கு ஏற்ப ஒன்றிணைப்பு பற்றிய அறிவித்தல்**

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 09(2) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனியின் பெயர் 2025, ஏப்பிறல் 23 முதல் மாற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.**

**கொழும்பு சவுத் விஷர்லி இன்டர்நெஷனல் ஸ்கூல் ( பிரைவட்) லிமிடெட் அலிதியா இன்ஸ்ரியற் ஒவ் மனேஜ்மென்ட் சேர்விஸஸ் ( பிரைவட்) லிமிடெட் உடன் ஒன்றிணைப்பு**

**கொழும்பு சவுத் விஷர்லி இன்டர்நெஷனல் ஸ்கூல் ( பிரைவட்) லிமிடெட் ( கம்பனி இலக்கம் - PV 17903) மற்றும் அலிதியா இன்ஸ்ரிரியூற் ஒவ் மனேஷ்மென்ட் சேர்விவிஸஸ் ( பிரைவட்) லிமிடெட் ( கம்பனி இலக்கம் PV 5376) ஆகியவற்றின் பணிப்பாளர்களின் சபை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(2) ஆம் பிரிவின் விதிகளுக்கு ஏற்ப கம்பனியின் ஒன்றிணைப்பை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதுடன் இதன் மூலம் விஷர்லி இன்டர்நெஷனல் ஸ்கூல் கொழும்பு சவுத் ( பிரைவட்) லிமிடெட் மற்றும் அலிதியா இன்ஸ்ரியூற் ஒவ் மனேஜ்மென்ட் சேர்விசெஸஸ் ( பிரைவட்) லிமிடெட் ஆகியன ஒரு தனி நிறுவனமாக ஒன்றிணைப்பாகவுள்ளதுடன் அதன் பின்னர் விஷர்லி இன்டர்நெஷனல் ஸ்கூல் கொழும்பு சவுத் ( பிரைவட் ) லிமிடெட் என தொடர்ந்து இயங்கும்.**

**ஒன்றிணைப்பை 2025, யூலை 01 ஆந் திகதி நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

விஷர்லி இன்டர்நெஷனல் ஸ்கூல் கொழும்பு சவுத் ( பிரைவட்) லிமிடெட்
மற்றும் அலிதியா இன்ஸ்ரியூற் ஒவ் மனேஜ்மென்ட் சேர்விசெஸ்
(பிரைவட்) லிமிடெட்.

05-177

---

**அறிவித்தல்**

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் 2025, மே 02 ஆந் திகதி முதல் அமுலுக்கு வருமாறு கீழே குறிப்பிடப்படும் கம்பனியின் பெயர் மாற்றப்படுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.**

*பழைய பெயர்* : நெக்ஸஸ்நோவா இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
*பதிவு இல.*: PV 00297179
*பதிவு முகவரி* : 790, ஹெவ்லொக் வீதி, கொழும்பு-06
*புதிய பெயர்* : இஷாரா ட்ரேடர்ஸ் மோட்டார் கம்பெனி ( பிறைவட்) லிமிட்டட்

திருமதி ரவீந்திரினி செனவிரத்ன,
கம்பனிச் செயலாளர்.

05-197

## பொது அறிவிப்பு

**இதன் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனம் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் படி பதிவுசெய்யப்பட்டிருப்பது அறிவிக்கப்படுகிறது.**

*நிறுவனத்தின் பெயர்* : ஷார்ப் எட்ஜ் செக்யூரிட்டி சர்வீசஸ் (பிவிடி) எல்டிடி
*பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி* : 207A , நரங்கஸ் சந்திப்பு, போப், பதுக்க
*நிறுவனத்தின் பதிவு இல.*: PV 00322180
*பதிவு செய்யப்பட்ட திகதி* : 2025.02.17

செயலாளர்.

05-206

---

### வரையறுக்கப்பட்ட பொறுப்பு ஒன்றின் கூறப்பட்ட மூலதனத்தின் குறைப்பு பற்றிய அறிவித்தல்

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

*கம்பனியின் பெயர்* : ஜுவலெக்ஸ் ( பிரைவட்) லிமிட்டெட்
*கம்பனி இல.*: பீ.வீ. 3965
*கூறப்பட்ட மூலதனம்* : ரூபா. 9,300,000
*குறைப்பின் பின்னரான கூறப்பட்ட மூலதனம்* : ரூபா. 108,000

மனேஜ்மன்ட் அப்ளிகேசன்ஸ் ( பிரைவட்) லிமிட்டெட் ,

செயலாளர்கள்.

இல.12, ரொட்டுண்டா கார்டன்ஸ்.
கொழும்பு -03,
2024, செத்தெம்பர் 4.

05-220

---

# ஏல விற்பனைகள்

### யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சி இன் பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) 09 ஆவது சிறப்புச் சட்டப்படி ஏல விற்பனை விளம்பரம்

**முதலாவது ஆதன இடாப்பு**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளை, பல்லே பத்துவ, ஹோமாகம பிரதேச சபை எல்லையினுள் , ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில், மேற்கு மாகம்மன கிராம அலுவலர் பிரிவில், ஹோமாகமவில் அமைந்துள்ள "அம்பகஹலந்த" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 52004 மற்றும் 2016.09.14 ஆந் திகதியுடைய வரைபடத்தில் நிரூபிக்கப்பட்ட லொட் 0058 என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதியின் விஸ்தீரணம்**: ( 0.063 ஹெக்கடயார்)**

விசாலமுடைய காணித்துண்டோடும், அதன்மீதுள்ள கட்டிடங்கள், திரைகள் மற்றும் பொருத்தப்பட்ட மற்றும் அதன்மீதுள்ள இலைகுலை, பயிர்ச்செய்கை, பழங்கள் ஆகிய அனைத்து சகலதும். இந்த காணி ஹோமாகம காணிப்பதிவு செய்யும் அலுவலகத்தில் 00030015428 என்ற உரிமைப் பதிவுச்சான்றிதழின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**இரண்டாவது ஆதன இடாப்பு**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில், ஓவிடிகம கிராம அலுவலர் பிரிவில், ஒவிடிகம வில் அமைந்துள்ள அளவையாளர் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 520025 என்ற கடஇம் வரைபடத்தில் நிரூபிக்கப்பட்ட வலய இல. 07 என்ற காணித்துண்டு இல. 0030 என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதியின் விஸ்தீரணம்**: ( 0.0923 ஹெக்டயார்)**

விசாலமுடைய காணித்துண்டோடும், இல. 00030066030 என்ற உரிமைப்பதிவுச்சான்றிதழில் இந்தக் காணி ஹோமாகம காணிப்பதிவுசெய்யும் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் மீகொட, பழைய வீதி, இல. 635/ 7 என்ற முகவரியில் தனிப் பதிவு அலுவலகத்தில் நடாத்திச் செல்லும், வியாபார பதிவுசெய்யும் இலக்கம் 5795 என்ற எல்பா இன்டர்பிரைசஸ் நிறுவனத்தின் உரிமையாளரான கபு ஆரச்சிகே ஜானக பிரதீப் சந்திரகுமார ( தேசிய அடையாள அட்டை இல. 782130480 V) இதன் பின் "கடனாளி" என அழைக்கப்படும்) என்பவரால் கம்பனி பதிவு இலக்கம் PB 676PQ உள்ள யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி ( இதன் பின்னர் "யூனியன் பாங்க்" என அழைக்கப்படும்) ஏனைய கடன்வசதிகளை பெற்றுக்கொண்டுள்ளதோடு, மேற்குறித்த கடனாளி அவர்களால் முறையாக பிரசித்த நொத்தாரிசு எம்.பி.டபிள்யூ. மலவிபதிரண மற்றும் ஜே.பி. நயந்திரா அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இல. 520004 என்ற கடஇம் வரைபடத்தில் நிரூபிக்கப்பட்ட லொட் ( காணித் துண்டு இல. 0058 மற்றும் இல. 520025 என்ற கடஇம் வரைபடத்தில் நிரூபிக்கப்பட்ட லொட் ( காணி துண்டு இல. ) 0030 என்ற காணித்துண்டு சம்பந்தமாக ஈட்டு முறி 02 ஐயும் எழுதி கையொப்பமிட்டு, மேற்குறித்த கடன் வசதிகளினால் மீள செலுத்துவதற்கு மேற்குறித்த கபு ஆரச்சிகே ஜானக பிரதீப் சந்திரகுமார என்பவரால் ( இதன்பின் "கடனாளி " என அழைக்கப்படும்) மற்றும் ப்லோரி மோசஸ் என்பவர் ( இதன்பின் "அடகுவைப்பாளர்" என அறிமுகப்படுத்தப்படும் ) (தேசிய அடையாள அட்டை இல. 768002487ஏ) என்ற கீழே ஆதன இடாப்பில் காண்பிக்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்ட காணி பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளதோடும், யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி மூலம் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்,

முதலாவது ஆதன இடாப்பில் காண்பிக்கப்பட்ட காணி 2025, யூலை மாதம் 08 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு
இரண்டாவது ஆதன இடாப்பில் காண்பிக்கப்பட்ட காணி 2025, யூலை மாதம் 08 ஆந் திகதி பி.ப. 1.00 மணிக்கு
காணி அமைந்திருக்கும் அதே இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

**காணிக்குச் செல்லும் விதம்:**

**முதலாவது ஆதன இடாப்பு:** ஹோமாகம நகரத்தில் இருந்து ஹோமாகம - தியகம வீதியில் திரும்பி 3.2 கிலோமீற்றர் பிரயாணம் செய்யும் பொழுது 10 அடி அகலப்பாதையின் வீதியில் வலதுபக்கம் திரும்பி ( படஹேன வீதி முன்னேயுள்ள வீதி) 75 மீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது, விடயமுடைய காணியை மேற்குறித்த வீதியில் அடைய இடது பக்கத்தில் அமைந்துள்ளது. (வீதி வலது வலைவில் ) இல. 152, மாகம்மன, ஹோமாகம).

**இரண்டாவது ஆதன இடாப்பு:** கொடகம சந்தியில் இருந்து பாதுக்க வீதி ஊடாக ( பாதை இல. 125) மீகொட வரை 1.5 கிலோமீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது தாம்பே வீதியில் வலது பக்கம் திரும்பி 1 கிலோமீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது இடது பக்கம் திரும்பி 400 மீற்றர் பிரயாணம் செய்யும் பொழுது மேலும் 200 மீற்றர் பிரயாணம் செய்யும் போது விடயமுடைய காணி இடதுபக்கத்தில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு:** 2023.06.16 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2023.06.16 ஆந் திகதிய மவ்பிம, சிலோன் டுடே மற்றும் தினக்குரல் ஆகிய தினசரி பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்:** உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10%;
(2) மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் பாங்க் பிஎல்சி பிரதான அலுவலகத்தில் செலுத்த வேண்டும்;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் ரூபா 2,500;
(4) உள்ளூர் மன்ற வரி 1%;
(5) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் மற்றைய செலவுகள் 100%;
(6) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1.500 ரூபா;
(7) நொத்தாரிசு மற்றும் ஏனைய கட்டணம் ரூபா 3,500.

சட்டப்பிரிவு திணைக்களம், யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி, இல. 64, காலி வீதி, கொழும்பு -03.
தொலைபேசி இலக்க : 011- 2374100.

எல்.பி. சேனாநாயக்க ,
உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர்,
மதிப்பீட்டாளர். கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம்,
மேல் மாகாணம், கொழும்பு மாவட்ட நீதிமன்றம்,
அரச மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 7/1/10,
1 ஆவது மாடி,
சுப்பர் மார்க்கட் கட்டிடத் தொகுதி
கொழும்பு -08,

தொலைபேசி இலக்கம் : 011- 2396520.

05- 225

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது